RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22262

# நாயன்மார்களின் வழிபாட்டு நெறிமுறைகள்

## இரா. மாணிக்கவாசகன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Ethics of Worship of Nayanmars

## R. Manickavasagan [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author:
ramnct24@gmail.com

Received: 27.09.2022
Revised: 29-10-2022
Accepted: 04-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

There are twelve Saiva Thirumurais (The Thirumurai is a twelve-volume compendium of songs or hymns in praise of Shiva). Periyapuranam is the twelfth of these. Periyapuranam simplifies the methods of worship. Sixty-three Nayanmars excelled in the worship of Lord Shiva. They followed three kinds of worship and attained salvation. The three types of worship of Guru worship, Linga worship, and Confluence worship are mentioned in the Saiva Siddhanta texts. Linga worship is of two types: Athmartham (Spirituality) and Paramārtham (Salvation). The worship of the Spiritual Linga belongs to everyone. The worship of the Salvation Linga in the temple belongs to the Adi Saivas. The worship of the devotee is the best way to conquer the three subjects that prevent the attainment of the Supreme Being, Shiva. Most of the Nayanmars worship with devotion. Moreover, the lives of the Nayanmars were a form of worship. The ethics shown by them are a simple method of attaining salvation.

**Keywords:** Worship, Nayanmars, Salvation, Spirituality

## முன்னுரை

மனித குலத்தின் நன்றியுணர்வு அடிப்படையில் எழுந்ததே வழிபாடு ஆகும். கேவல நிலையில் கிடந்த ஆன்மாவிற்குத் தனு, கரண, புவன போகங்களைத் தந்தவன் சிவபெருமான். அறிவு செயலற்றுக் கிடந்த உயிர்களுக்கு இறைவன் தானே இரங்கி வந்து, உடல், மனம், உலகம், அனுபவிக்க வேண்டிய போகங்கள் ஆகிய அனைத்தையும் வழங்கி வாழவைத்துக் கொண்டு இருக்கின்றான். இவை எல்லாம் வழங்கிய இறைவனுக்கு நன்றி செலுத்தும் உயரிய பண்பாடே வழிபாடு ஆகும்.

“எல்லாம் உதவும் உனைஒன்றிற் பாவனை
யேனுஞ் செய்து
புல்லாயினுமொரு பச்சிலை யாயினும்
போட்டிறைஞ்சி
நில்லேன் நல்யோக நெறியுஞ்செயேன்
அருள் நீதி ஒன்றும்
கல்லேன் எவ்வாறு பரமே பரகதி
காண்பதுவே” (Kamalakkannan, 2019)

தாயுமானவரின் இப்பாடல் வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. வாழ்த்துவதற்கு வாயும், நினைப்பதற்கு நெஞ்சும், வணங்குவதற்குத் தலையும் தந்த இறைவனுக்கு மலரிட்டுத் துதி செய்யாமல் பலகாலம் வீணாகப் போயிற்று என்று வருந்துகிறார் நாவுக்கரசர்.

"வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும்

தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்

சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே

வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே" (Thirunavukarasar, 1957)

மனித குலத்தின் அடிப்படை நெறியான வழிபாட்டினைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் நன்றாக விளக்கியுள்ளார். அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாற்றைப் பெரியபுராணம் எடுத்தியம்புகிறது. பெரியபுராணத்தில் வருகின்ற நாயன்மார்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு குலங்களில் தோன்றியவர்கள். அவர்கள் சிவபக்தியின் சிறப்பை உலகிற்கு எடுத்துக் காட்டியவர்கள். சிவவழிபாட்டில் மிக உறைப்பாக நின்றவர்கள் சைவ சித்தாந்த அடிப்படையில் மூன்று வகை வழிபாட்டினையும் அவர்கள் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளனர். அவையாவன, குருவழிபாடு, இலிங்கவழிபாடு, சங்கம வழிபாடு இந்த மூவகை வழிபாட்டின் நிலைகளைப் பற்றி இந்தக் கட்டுரையில் விரிவாக காண்போம்.

## குருவழிபாடு

சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரத்தில் குருவழிபாட்டின் மேன்மை சூட்டப்பெறுகின்றது. ஒரு வித்தியாச்சிரமத்தில் சேர்ந்த மாணவனுக்கு உபாத்தியாய எந்த வித்தையை எப்படிக் கற்பது என்று வழிகாட்டுகின்றார். அதுபோலக் கேவல நிலையிலிருந்து சகல நிலைக்கு வந்த ஆன்மாக்களுக்கு எப்படி வாழவேண்டும், கடவுள் யார்? அவரை எப்படி அடைய வேண்டும்? என்ற உண்மைகளைக் குருவானவர் நெறிப்படுத்துகின்றார்.

ஆன்மா தன்னையும் அறியாமல் தலைவனையும் அறியாமல் ஐம்புல வேடர்களோடு சேர்ந்து மயக்கத்தில் உழன்று கொண்டிருக்கின்றது. அத்தகைய ஆன்மாக்களுக்கு இறைவனே குருவாக எழுந்தருளிச் சரியை, கிரியை, யோக நெறிகளான தவநெறியை உணர்த்துகின்றார். தவநெறியில் ஆன்மா தன்னை உணரும்போது பாசத்தினின்றும் விடுதலை பெறுகிறது. அல்லது விட முயற்சிக்கிறது. அந்நிலையில் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள உரிமை, உறவு உணர்த்தப்படுகின்றது. பிறகு தவநெறியில் பக்குவப்பட்ட ஆன்மா கடவுளை அடைந்து பேரின்பத்தை அடைகிறது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே"

"நானார் என் உள்ளமார் ஞானங்களார்

என்னை யாரறிவார்

வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்

மதி மயங்கி

ஊனார் உடைதலையில் உண்பலிதேர்

அம்பலவன்

தேனார் கமலமே சென்றூதாய்க்

கோத்தும்பி" (Nadarasan, 2007)

குரு உணர்த்தவில்லையாயின் ஆன்மாக்களால் ஒன்றையும் உணர முடியாது. அத்தகைய குருவழிபாட்டில் நாயன்மார்கள் சிறந்து விளங்கியுள்ளனர்.

## குருவழிபாடு செய்தவர்கள்

பெருமிழலைக் குறும்பர், அப்பூதி அடிகள், பெருமிழலைக் குறும்ப நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளையே குருவாகக் கொண்டு வழிபட்டு முத்திபெற்றவர். யோக நிலையில் அவரையே எண்ணி இருந்து கயிலை அடைந்தவர். சுந்தரர் ஆடி மாதம் சுவாதி நாளன்று கயிலை சேர்ந்தார். பெருமிழலைக் குறும்பர் அதனை அறிந்து முதல் நாளே தனது யோக சித்தியால் திருக்கயிலைக்குச் சென்றுவிட்டார். தமிழகத்தின் புதுக்கோட்டைப் பகுதியில் இவர் வாழ்ந்து வந்ததாகக் கருதப்படுகின்றது. புதுக்கோட்டைக்கு அருகில் தேவமலை என்னும் ஊரில் இவருடைய சீவசமாதி அமைந்துள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர் நாயன்மாராக வருவதற்கு முன்பாகவே திருத்தொண்டத்தொகையில் "பெருமிழலைக் குறும்பர்க்கு அடியேன்" என்று பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அப்பூதி அடிகள்

இவர் சமய குரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசரையே குருவாகக் கொண்டு வழிபாடு செய்து முத்திபெற்றவர். அவரைப் பார்க்காமலே அவருடைய பெருமையைக் கேள்விப்பட்டு அவரிடம் பத்திக் கொண்டவர். திருநாவுக்கரசு என்னும் நாமத்தை இடையறாது உச்சரித்தவர். ஒருநாள் நாவுக்கரசர் தமது இல்லத்திற்கு எழுந்தருளினார். அன்று வாழை இலை பறிக்கச் சென்ற மகன் அரவால் வீடினான். ஆனாலும் பக்தியைவிடாமல் நாவுக்கரசருக்கு அமுது படைத்தார். இதை உணர்ந்த நாவுக்கரசர் இறந்துபோன மகளை உயிர்பெறச் செய்தார். இவருடைய குருபக்தியைப் பெரியபுராணம் நன்றாக விவரிக்கிறது.

"களவுபொய் காமங் கோபம்
முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை
நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள்
ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமம்
சாற்றுமவ் வொழுகல் ஆற்றார்" (Gnanasambandan, 1999)

## இலிங்க பக்தி செய்தவர்கள்

நாயன்மார்கள் அனைவருமே சிவலிங்க வழிபாடு உடையவர்களாக இருந்தாலும் சிலரை மட்டுமே இங்கு அடையாளம். கண்ணப்ப நாயனார், சண்டேசுர நாயனார், புகழ்த்துணை நாயனார், சாக்கிய நாயனார், அரிவாட்டாய நாயனார் சிவலிங்கம் அருவுருவம் ஆகும். தத்துவங்களில் முப்பத்து நான்காவது தத்துவமாக விளங்குவது சிவதத்துவமாகும். இதனைச் "சதாக்யம்" என்பர். மேலிருந்து எண்ணும்போது முதல் தத்துவம் "நாதம்". இரண்டாவது தத்துவம் "விந்து" தத்துவமாகும். நாதம் விந்துவாகிய இரண்டும் சேர்ந்து "சதாசிவமான" மூன்றாவது தத்துவமாக அமைகிறது. பிரம, விஷ்ணு முதலானவர்களும் ஏனைய தத்துவங்களும் இதிலிருந்தே உண்டாகின்றன. உலகம் தோன்றுவதற்கு முன்பே சிவலிங்கம் தோன்றியது.

சண்டேசுர நாயனார் பசுக்களை மேய்க்கச் சென்றார். அப்போது பசுக்கள் பால் சொரிவதைக் கண்டார். அவருக்குச் சிவபூஜையில் நினைவு உண்டாகியது. உடனே மணலால் சிவலிங்கத்தை அமைத்து, பாலைக் கறந்து, மலர்களைப் பறித்துக் கொண்டு பூசிக்கத் தொடங்கினார்.

ஊர் மக்கள் பாலைக் கறந்து மண்ணில் ஊற்றி விளையாடுகிறான் என்று குற்றம் சாற்றினர். இதனால் தந்தை கோபித்துப் பாலைத் தட்டிவிட்டார். சண்டேசுரர் அருகில் இருந்த ஒரு துரும்பை

எடுத்து ஓச்சினார். அது மழுவாயிற்று. தந்தையின் கால் வெட்டப்பட்டது. சிவபெருமான் காட்சி தந்து “சண்டேசுரப் பட்டம்” வழங்கினார்.

சிவலிங்க பூசையே மிக உயர்ந்தது என்று நாயன்மார்கள் காட்டியுள்ளனர். சிவலிங்க பூசை இரண்டு வகைப்படும். ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை. ஆன்மார்த்த சிவலங்க பூசை யார் வேண்டுமானாலும் செய்யலாம். அன்பு, தூய்மை மட்டுமே தகுதி. ஆனால் பரார்த்த பூசை விப்பிர சைவர்களான ஆதிசைவர்களால் மட்டுமே பூசிக்கப்பட வேண்டும். இதற்குக் குல ஆசாரம் வேண்டும். ஆதிசைவர்கள் சிவபெருமானால் தீட்சை செய்யப்பெற்றவர்கள். அவர்கள் பூசை செய்வதற்காகவே படைக்கப்பெற்றவர்கள். வேதம் பயின்ற பூசைக்கு உரியவராகமாட்டார்.

“சிவன் முகத்திலே செனித்த விப்பிர சைவர்

இவரே அருச்சனைக்கு என்று எண்”6

இதனைச் சேக்கிழார்,

“தெரிந்துணரின் முப்போதும்

செல்காலம் நிகழ்காலம்

வருங்காலம் ஆனவற்றின்

வழிவழியே திருத்தொண்டின்

விரும்பியஅர்ச் சனைகள்சிவ

வேதியர்க்கே உரியனஅப்

பெருந்தகையார் குலப்பெருமை

யாம்புகழும் பெற்றியதோ” (Gnanasambandan, 1999)

என்று எடுத்துரைக்கின்றார். வேதம் பயின் பிராமணர் பரார்த்த லிங்கத்தைத் தொட்டால் அதற்குப் பரிகாரம் செய்தல் வேண்டும்.

“வைதிகர் பெறினும் சைவ

தீக்கையை வாய்க்க வேதம்

கையினாற் பரார்த்த லிங்கம்

தீண்டுதல் கடனோ அன்று

வையகம் தனக்கு நாசம்

வருமிவர் தீண்டிற் சுத்த

சைவராற் பரிகா ரத்தைச்

சாற்றுநூல் கரைந்த வாற்றால்”

சிவபெருமானுடைய திருமுகத்தில் உற்பவித்த கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர் அகத்தியர் ஆகிய பஞ்சரிஷிகளின் வம்சத்தில் வருபவர்களே ஆதிசைவர்கள். இவர்கள் நால்வருணத்திற்கு அப்பாற்பட்டவர்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கின்படி இவர்கள் பரார்த்த பூசை செய்தற்கு உரியவர்கள் என்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சங்கம வழிபாடு

“சங்கமம்” என்பது அடியவர்களைக் குறிக்கும். அடியவர்கள் என்பவர்கள் சமய அனுட்டானங்களை முறைப்படி அனுசரிக்கக் கூடிய குருவிடம் சமய விசேட நிருவாண தீக்கைகளைப்பெற்று அந்தந்த நிலைகளில் சிவபெருமானை வழிபாடு செய்பவர்கள். மூலஸ்தானத்தில்

இருக்கின்ற இலிங்க மூர்த்திக்குத் “தாபரம்” (அசையாதது) என்றும், நடமாடுகின்ற அடியார்களுக்குச் “சங்கமம்” (அசைவது) என்றும் பெயர். இறைவன் இந்த இரண்டு இடங்களில் மட்டுமே பூசையை ஏற்றுக் கொள்கிறான். சிவபெருமான் படமாடுங்கோயில், அடியார்கள் நடமாடும் கோயில், அடியார்களை வணங்கிய பலனைப்பெறலாம் என்பது நாயன்மார்கள் காட்டிய நெறியாகும்.

“செம்மலர் நோன்றாள்

சேர லொட்டா

அம்மலங் கழீஇ

அன்பரொடு மரீஇ

மாலற நேயம்

மலிந்தவர் வேடமும்

ஆலயந் தானும்

அரன் எனத் தொழுமே”

ஆன்மாவிற்கு இயல்பாக உள்ள மலம் ஆணவமலம் ஆகும். இந்த மலத்தை நீக்கும் பொருட்டாக இறைவன் மேலும் இரண்டு மலங்களைச் சேர்க்கின்றான். அவை “கன்மம்”, “மாயை” என்பனவாகும். இந்த மூன்று மலங்களும் இறைவனை அடையவிடாமல் தடுக்கின்றன. இம்மலங்கள் நீங்க வேண்டுமெனில் அடியார்களின் திருவேடத்தையும் சிவமாக வணங்குக என்று சிவஞானபோதம் எடுத்துரைக்கிறது. அடியவர் வழிபாடு மலத்தை நீக்கி வீடுபேற்றை அளிக்க வல்லது. இளையான்குடி மாற நாயனார், மெய்ப்பொருள் நாயனார், ஏனாதி நாத நாயனார், சிறுதொண்டர் நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் ஆகியோர் அடியவர் வழிபாடு செய்து முத்தி பெற்றுள்ளனர்.

## முடிவுரை

இறைவனை அடைவதற்கு வழிபாடு மிகவும் முக்கியமானது. அந்த வழிபாடு எளிமையான முறையில் அமைய வேண்டும் என்பது நாயன்மார்களின் நெறியாகும். அவர்களின் வாழ்க்கையே வழிபாடாக இருந்தது. தாம் செய்கின்ற தொழிலையே வழிபாடாக மாற்றிக் கொண்டனர். மூன்று வகையான வழிபாடுகளை நாயன்மார்கள் மேற்கொண்டு நமக்கு வழிகாட்டியுள்ளனர். இந்த நெறியில் வழிபாடு செய்தால் எளிமையாக முத்தி நலன் கிட்டும் என்பது இக்கட்டுரையின் முடிபாகும்.

## References

Gnanasambandan, A.S. (1999) Periya Puranam oor aaivu, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Kamalakkannan, B. (2019) Thayumanavar Padalgal Meignana Thirattu, Vanathi Pathippakam, Chennai, India

Nadarasan, (2007) Thiruvasagam, Uma Pahippagam, Chennai, India.

Thirunavukarasar, (1957) Thevaaram, Sri Kumaragurupara Sangam, Sri Vaikundam, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License